இனிமையான குழந்தைகளே! தொலை நோக்கு பார்வையும், விசாலபுத்தியும் உடையவர் ஆகுங்கள். சிவபாபாவின் காரியத்தில் ஒருபொழுதும் தொந்தரவு விளைவிக்காதீர்கள். அவ்வாறு செய்பவர்களுக்கு ஒரு பொழுதும் உயர்ந்த பதவி கிடைக்க முடியாது.

கேள்வி: இந்த உலகத்தில் மனிதர்களுக்கு இருக்கும் எந்த ஒரு சிந்தனை சத்யுக தேவதைகளுக்கு ஒரு பொழுதும் வராது?

பதில்: இங்கு மனிதர்கள் நாங்கள் சம்பாதித்தோம் என்றால் பிற்காலத்தில் எங்களது குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் அனுபவிப்பார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் இது போன்ற எண்ணங்கள் தேவதை களிடம் இருக்காது. ஏனெனில் அவர்களுடைய குழந்தை கள் மற்றும் பேரக்குழந்தைகள் எல்லோருமே இங்கிருந்து தான் ஆஸ்தி எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். எங்களுடையது அழிவற்ற இராஜ்யம் ஆகும் என்று அவர்கள் புரிந்திருப்பார்கள். இங்கேயே அவர்கள் ஒவ்வொருவரும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

பாடல்: மாதா ஓ! மாதா ....

ஓம்சாந்தி - குழந்தைகள் தாய்மார்களின் மகிமையைக் கேட்டீர்கள்; எந்தெந்த மாதாவிற்கு மகிமை பாடப்படுகிறது என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளீர்கள். மாதர்களுக்கு இவ்வளவு மகிமை செய்கிறார்கள் என்றால் அவசியம் அவர்கள் வாழ்ந்திருந்து சென்றிருப்பார்கள். இப்பொழுதோ அவர்கள் இல்லை. எந்த ஜகதம்பா வாழ்ந்திருந்து சென்றாரோ அவருக்கு பக்தி மார்க்கத்தில் மகிமை செய்யப்படுகிறது. இப்பொழுது அவர் என்ன செய்துவிட்டு சென்றார் என்பது உங்களுக்கும் தெரியாமல் இருந்தது. ஜகதம்பாவின் கோவிலுக்குச் செல்கின்றார்கள், அவரிடம் ஏதாவது வேண்டுகின்றார்கள். ஒருவர் குழந்தைப்பேறு வேண்டும் என்ற விருப்பம் உடையவராக இருப்பார், இன்னொருவர் ஆசீர்வாதம் வேண்டுவார். இப்பொழுது இந்த ஜட சித்திரங்களாலோ ஒன்றுமே செய்ய முடியாது. அவர்களுக்கு புரிவதும் இல்லை. ஆனால் இது பக்தி ஆகும். அவர்கள் இருந்து சென்றுள்ளார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஜகதம்பாவிற்கு மகிமை உள்ளது. ஒருவர் மட்டும் கிடையாது. நீங்கள் எல்லோருமே பிராமண குலத்தின் பராமரிப்பு செய்கிறீர்கள். பின் தெய்வீக குலத்தினைப் பராமரிப்பீர்கள். நீங்கள் இந்த சமயம் பார்க்கப்போனால் முழு உலகிற்கும் பராமரிப்பை செய்கின்றீர்கள். ஆனால் யாருக்குமே தெரியாது. சண்டிகா தேவிக்கு கூட திருவிழா நடக்கிறது. சண்டிகை என்ற பெயரே பாருங்கள் எவ்வளவு மோசமானதாக உள்ளது. பாபா கூறுகிறார் யார் ஆச்சரியப்படும் வகையில் ஓடிப் போகிறார்களோ, கைவிட்டு விடுகிறார்களோ அவர்கள் போய் சண்டாளனுடைய வீட்டில் பிறவி எடுக்கின்றார்கள். வீட்டில் குறும்புத்தனம் செய்தால் என்ன சண்டித்தனம் செய்கிறாய்? நீ சண்டாளன் ஆவாய், என்று கூறுகிறார்கள் அல்லவா? உண்மையில் நீங்கள் பார்க்கிறீர்கள் சிவபாபாவினுடையவர் ஆன பிறகும் மிகவும் சஞ்சலத்தன்மை காட்டுகிறார்கள் அதாவது கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள், சிவபாபாவின் சேவையில் பங்கம் ஏற்படுத்துகிறார்கள் என்றால் கடைசியில் சென்றே விடுகிறார்கள். எந்த ஒரு பிரம்மாகுமாரியும் சென்டரில் இருக்கிறார், ஏதாவது தவறு செய்கிறார், எவருக்கும் ஞானம் புரிய வைக்க முடியாமல் இருக்கிறார், அல்லது கோபம்

நிறைந்தவராக இருக்கிறார் - பின் எல்லோரும் கூறுவார்கள் இவருக்கோ கோபம் நிறைய இருக்கின்றது... என்று இப்பொழுது சண்டிகை ஒருவர் மட்டும் இல்லை, நிறைய பேர் இருக்கிறார்கள். தேவிகளின் மகிமையும் உள்ளது மற்றும் இது போல யார் சண்டிகை ஆகிராரோ அவர்களுக்கும் பாடல் உள்ளது. பிறகும் இறைவனுடையவர் ஆகி உள்ளார்கள். ஒரு சிலர் விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள் என்றாலும் கூட பிறகும் சொர்க்கத்தில் வருவார்கள் அல்லவா? எஜமானரோ ஆவார்கள் அல்லவா? எஜமானரோ இராஜா ராணி தான் என்றாலும் கூட பிறகும் பிரஜைகளும் கூட நாங்கள் எஜமானர் ஆவோம் என்றே கூறுவார்கள். காங்கிரஸ் கட்சியினர் எங்களது பாரதம் மகான் என்று கூறுகிறார்கள் அல்லவா? தற்சமயத்திலோ பாடலில் கூட பாரதம் மிகவும் நன்றாக இருந்தது என்று பாடிக் கொண்டேயிருக்கின்றார்கள். இன்றோ ரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கின்றது.

இப்பொழுது நீங்கள் எல்லையில்லாத தந்தையின் குழந்தைகள் ஆகியுள்ளீர்கள். கோபி வல்லபரின் கோப கோபியர்கள் என்று பாடப்பட்டுள்ளது. வல்லபர் என்று தந்தைக்குக் கூறப்படு கின்றது. ஒரு கோபி வல்லபரின் அநேக கோப கோபியர்கள் என்றும் பாடப்படுகிறது. சத்தியுகத் திலோ கோபியர்கள் ஆகியோர் பற்றிய விஷயமே கிடையாது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் விசாலமான, தொலை நோக்கு புத்தி உடையவர் ஆகியுள்ளீர்கள். புத்தியின் பூட்டு திறந்துள்ளது. இந்த பிறவியின் வாழ்க்கைச் சரித்திரத்தை நீங்கள் நல்ல முறையில் அறிந்துள்ளீர்கள். ஒவ்வொருவருக்கும் பெருமிதம் இருக்கிறது அல்லவா? இப்பொழுது பிர்லா இருக்கிறார் அவருக்கு தனது செல்வத்தின் போதை (கர்வம்) இருக்கும். நான் எல்லோரையும் விட செல்வந்தராக உள்ளேன் என நினைப்பார். ஆனால் யார் இன்று செல்வந்தராக இருக்கிறார் களோ அவர்கள் பின்பு ஏழையாகி விடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய மற்றும் மற்ற மனிதர்களின் புத்தியில் இரவு பகலுக்கான வித்தியாசம் உள்ளது. ஒருவருக்கு ஒரு போதை, இன்னொருவருக்கு இன்னொரு விதமான போதை.... இருக்கிறது... நான் இன்னராக இருக்கிறேன்... இப்படி இருக்கிறேன்... இவருக்கு (பிரம்மாவிற்கு) கூட நான் பெரிய வைர வியாபாரி என்ற போதை இருந்தது. இப்பொழுது அந்த எல்லா போதையும் சோழிக்குச் சமமானது என்று நினைக்கிறார். குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு போதை ஏறியுள்ளது. அவர்கள் நினைக்கிறார்கள் நாங்கள் சம்பாதிப்போம் பிற்காலத்தில் நமது குழந்தைகள், பேரக் குழந்தைகள் அனுபவிப்பார்கள் என்று. இங்கோ அந்த விஷயம் கிடையாது. நாம் எல்லை யில்லாத தந்தையை அறிந்து அவரிடமிருந்து ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனுடைய பலனாக நாமே பிற்காலத்தில் பிறவி பிறவியாக பதவி அடைவோம். பையன்கள், பேரன்கள் ஆகிய எல்லோருமே இங்கு புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய பேரன்கள் அனுபவிப்பார்கள் என்ற இந்த சிந்தனை அங்கு இருக்காது. அழிவற்ற இராஜ்யம் ஆகும் என்று புரிந்திருப்பார்கள். இங்கோ ராஜாக்கள், புத்திரர் கள், பேரன்கள் அனுபவிப்பார்கள் என்று நினைப்பார்கள். நீங்கள் இப்பொழுது தந்தையிடமிருந்து எவ்வளவு ஆஸ்தி எடுக்கிறீர்கள், எப்பேர்ப்பட்ட கர்மம் செய்கிறீர்கள் என்றால் பின் 21 பிறவி களுக்கு அதன் பலன் கிடைத்துக் கொண்டே யிருக்கும். புத்திரர்கள், பேரன்கள் பற்றிய சிந்தனை இருக்காது. அவர்கள் எல்லோரும் கூட இங்கு தான் ஆஸ்தி பெறுகிறார்கள்.

உங்களுக்கு எவ்வளவு ஞானம் உள்ளது! மனிதர்களோ ஒன்றும் அறியாமல் உள்ளார்கள். இறை தந்தை என்று யாரை அவ்வளவு தூரம் நினைவு செய்கின்றார்களோ அவரிடமிருந்து அவசியம் அந்த அளவு அளவற்ற சுகம் கிடைக்க வேண்டும். ஹே! பரமபிதா பரமாத்மா கருணை புரிவாய்! என்று பாடுகிறார்கள் அல்லவா? அவர் பரம ஆத்மா என்று அழைக்கப்படுகிறார். அவர் சுப்ரீம் ஆவார். பிறப்பு இறப்பு அற்றவர். எனவே அவருக்கு பரம ஆத்மா அதாவது பரமாத்மா என்று கூறுகிறார்கள். அனைத்து ஆத்மாக்களின் ரூபம் ஒன்றுபோல் உள்ளது. எப்படி எப்படி புருஷார்த்தம் செய்கிறார்களோ அதற்கேற்ப பதவி அடைகிறார்கள். இவரது ஆத்மா நன்றாக படிக்கிறது எனவே நாராயணர் ஆகிறார். ஒரு சிலர் பிறகு தோல்வி அடைந்து விடுகின்றார்கள் என்றால் இராமர் ஆவார்கள். ஆத்மா தான் ஆகிறது அல்லவா? நான் பரமபிதா பரமாத்மா விடமிருந்து இராஜயோகம் கற்றுக் கொண்டு இருக்கிறேன் என்று உங்களது ஆத்மா அறிந்துள்ளது. ஆத்மா பிறகு சென்று புதிய உடை (சரீரம்) அணிந்து பாகத்தை நடிக்கிறது. நரனிலிருந்து நாராயணர் ஆவார். இது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் நம்பர் பிரகாரம் புருஷார்த்தப்படி உள்ளது. பிறகு இந்த ஞானம் மறைந்து போய்விடும். அங்கு யாரும் தூய்மையற்றவர்கள் இருக்க மாட்டார்கள். அவ்வாறானால் யாருக்கு ஞானம் கொடுப்பார்கள்? பதீதபாவனரை இங்கு தான் நினைவு செய்கின்றார்கள். சரி, கங்கை பதீத பாவனி ஆகும் என்று வைத்துக் கொள்வோம் ஆனால் அது இராஜயோகத்தைக் கற்பிக்க முடியாது. தந்தையோ இராஜ யோகம் கற்பிக்கிறார் அல்லவா! இந்த முழு நாடகத்தின் ரகசியம் ஆரம்பம் முதல் கடைசி வரை குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் உள்ளது.

நீங்கள் அனைவரும் ஒரே வகுப்பில் தான் படிக்கிறீர்கள். ஆனால் வரிசைக்கிரமமாக உள்ளீர்கள். ஆரம்பத்தில் 300 பேரின் பட்டி இருந்தது. பசுக்கொட்டகையில் ஆயிரக்கணக்கான பசுக்கள் இருந்தால் யாராலும் பராமரிக்கவும் முடியாது. பட்டி கூட கொஞ்சம் பேரைக் கொண்ட தாக அமைய வேண்டி இருந்தது. அதிலும் கூட ஒரு சிலரோ சரியாக நடந்து கொண்டேயிருக் கிறார்கள், ஒரு சிலர் விட்டுவிட்டார்கள். ஒரு சில குழந்தைகள் நாம் முதலிலேயே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அப்படியும் கிடையாது. பழையவர்கள் எவ்வளவு பேர் ஓடிப்போய்விட்டார்கள். 25-30 வருடமாக இருப்பவர் கள் கூட அந்த எல்லையில்லாத தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெறுகிறோம் என்பதை அந்த அளவு நினைவு செய்வதில்லை. பாபா சொர்க்கத்தின் எஜமானராக ஆக்குகிறார் ஒரு வினாடியின் விஷயமாகும். நீங்கள் என்னுடையவர் ஆவதால் சொர்க்கத்தின் எஜமானர் ஆவீர்கள் என்று தந்தை கூறுகிறார். ஜீவன் முக்தியோ இராஜா ராணியும் பெறுகிறார்கள், பிரஜைகளும் அடைகிறார்கள். ஒரு வினாடியில் ஜீவன் முக்தி என்று பாடப்பட்டுள்ளது. முழுமையாக படிக்காத குழந்தைகள் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? நிலையில்லாமல் தடுமாற்றத்தில் இருப்பார்கள். ஒரு சில குழந்தைகளோ மிகவும் கீழ்ப்படிபவர்களாக இருப்பார்கள். தந்தையை விடவும் நல்ல பதவியை அடைந்து விடுகிறார்கள். தந்தை 100-200 சம்பாதிப்பவராக இருப்பார். பையன் லட்சாதிபதி ஆகி விடுகிறான். எனவே அலௌகீக சம்பந்தத்தில் கூட அவ்வாறே ஆகிறது. 7 நாள் குழந்தை 25 வருடத்தினரை விடவும் வேகமாகச் சென்று

விடுகிறார், நம்பர் பிரகாரமாக இருக்கவே செய்வார்கள்.

நீங்கள் உண்மையில் எல்லோரும் பிரியதரிசினிகள் ஆவீர்கள். ஒரு பிரியதரிசனை நினைவு செய்கிறீர்கள். தந்தை வந்து நமக்கு சுகதாமத்தின் ஆஸ்தி அளிக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். லௌகீக கணவன் இருக்கும் பொழுதும் கூட அந்த கணவர்களுக்கெல்லாம் கணவனான பரமாத்மாவை நினைவு செய்கின்றார்கள். பரலோக நாயகன் அமிர்தம் பருகச் செய்கிறார். எனவே அவர் நினைவு செய்யப்படுகிறார். பிறகு நீங்கள் சொர்க்கத்தின் எஜமானர் ஆகிவிடுகிறீர்கள். அங்கு யாரையும் நினைவு செய்வதில்லை. இப்பொழுது செய்யும் முயற்சியினால் நீங்கள் 21 பிறவிகளுக்கு பலன் அடைகின்றீர்கள். உங்கள் புத்தி எவ்வளவு திறந்துள்ளது! அதுவும் நம்பர் பிரகாரம். எனவே அரசாட்சியைக் கூட நம்பர் பிரகாரம் பெறு கிறீர்கள். உங்களுக்கு எல்லாமே புரிய வைக்கப்பட்டுள்ளது. இங்கு நல்ல முறையில் படிப்பை படிப்பதால் நீங்கள் பதவியும் கூட அந்தளவு உயர்ந்ததாக அடைவீர்கள். இல்லாவிட்டால் படிக்காதவர்கள் படித்தவர்களுக்கு முன்னால் சுமை தூக்குவார்கள். இதில் மிகவும் நல்ல முறையில் முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது முயற்சிக்கான நேரம் கிடைத்துள்ளது. உயிருள்ளவரையும் ஞானாமிர்தம் பருக வேண்டும் அல்லது படித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாற்று நடப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஒரு சிலர் சட்டென்று புரிந்து கொள்கின்றார்கள். ஆக இவருடைய பதவியோ நல்லதாக தென்படுகிறது என்று புரிந்துகொள்ளப்படுகிறது. பாபாவிற்கு நல்ல நெருக்கமான மலர் ஆவார், உடல்-மனம்-பொருள் மூலம் அர்ப்பணம் செய்து அமர்ந்துள்ளார். சேவையில் நல்ல முறையில் ஈடுபட்டுள் ளார். தனது நேரத்தை எந்த அளவு சேவையில் ஈடுபடுத்துவோமோ அவ்வளவு நன்மை உள்ளது என்று அறிந்திருக்கிறார் - எப்படி பாபா ஞானக்கண் இல்லாத குருடர்களாகிய நமக்கு கைத்தடி ஆனாரோ அதேபோல நாமும் ஆக வேண்டும். நீங்கள் ஒருவருக்கொருவர் கைத்தடி ஆகிக் கொண்டே செல்கிறீர்கள். குருடனாக ஆக்கியது இராவணன். இச்சமயம் முழு உலகமே இலங்கை ஆகும் என்பது உங்களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. எல்லோரும் சோக வனத்தில் உள்ளார்கள். அசோகா ஹோட்டல் என்று பெயர் வைத்துள்ளார்கள். அங்கே கேளிக்கை முதலியவற்றில் ஈடுபடுகின்றனர்.

பாபா வந்துவிட்டார் என்பதை இப்பொழுது நீங்கள் தெரிந்துள்ளீர்கள். மகாபாரத போர் முன்னால் நிற்கிறது. சொர்க்க வாசல் திறக்க வேண்டி இந்த போர் நடக்கவே வேண்டியுள்ளது. துவாபரத் தினுடைய விஷயமே கிடையாது. இப்பொழுதோ காரிருள் ஆகும் அல்லவா? பிராமணர்களின் இரவு இப்பொழுது முடிந்து விட்டது. பாபா வந்துவிட்டார். இந்த விஷயங்களை குழந்தை களாகிய நீங்கள் தான் அறிந்துள்ளீர்கள். பள்ளியில் படிக்கிறார்கள் என்றால் ஒரு சிலரோ மிகவும் நல்ல மதிப்பெண் எடுக்கிறார்கள். ஒரு சிலர் தோல்வி அடைகின்றார்கள். தோல்வி என்பதன் அடையாளம். சந்திர வம்சத்தில் சென்றுவிடுவார்கள். இராமருக்கு சத்திரியரின் அடையாளம் காண்பித்துள்ளார்கள். அர்த்தத்தைப் புரிந்துக் கொள்ளவில்லை. லவ, குசன் பற்றி என்னென்ன விஷயங்களைக் கூறுகிறார்கள். எவ்வளவு பொய்யான பழியைப் போடுகின்றார் கள். பாடுகின்றார்கள் இராம ராஜா ராம் பிரஜா தர்மத்திற்கு உபகாரம் (நன்மை) என்று. இந்த விசயங்கள் எல்லாம் எங்கிருந்து வந்தது? இந்த

எல்லா விஷயங் களையும் புரிந்து கொள்ள வேண்டியது ஆகும். இந்த ஞானம் நமது புத்தியில் நம்பர் பிரகாரம் உள்ளது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஒவ்வொரு மாணவனும் மிகவும் தீவிரமாக புருஷார்த்தம் செய்ய வேண்டும். நாம் இறை தந்தையின் மாணவர்கள். எனும் போது யார் தான் டீச்சரை நினைவு செய்ய மாட்டார்கள். நாம் பதீத பாவன இறை தந்தையின் மாணவர்கள். இதில் தந்தை ஆசிரியர், சத்குரு மூவருமே வந்து விடுகின்றார்கள். நீங்கள் அனைவரும் சீதைகள் அல்லவா? இராவணனது சோக வனத்தில் இருக்கிறீர்கள். நிராகார சிவ தந்தை (இன்கார்போரியல் காட் ஃபாதர்) ஞானக்கடல் ஆவார். கிருஷ்ணரையோ லட்சுமி நாராயணரையோ இவ்வாறு கூற முடியாது. அவர்களது மகிமை தனிப்பட்டது. பாடலில் கூட யார் இவ்வாறு உருவாக்குகிறார் அவர்களது மகிமை அளவற்றது என்று பாடுகின்றார்கள். பாபா நாங்கள் உங்களிடமிருந்து முழு ஆஸ்தியை எடுப்போம். நீங்கள் எவ்வளவு இனிமையானவர், எவ்வளவு பிரியமானவர் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். லட்சுமி நராயணர் எவ்வளவு இனிமையான வர்களாக, எவ்வளவு பிரிய மானவர்களாக உள்ளார்கள். லட்சுமி-நாராயணரின் படத்தைப் பாருங்கள் எப்பொழுதும் புன்முறு வலுடன் கூடியதாக காண்பிக்கிறார்கள். தேவதைகள் இந்த பாரதத்தில் தான் இருந்தார்கள் என்று நீங்கள் அறிந்துள்ளீர்கள். இப்பொழுது எங்கே உள்ளார்கள்? இது அவர்களுடைய கடைசி பிறவி ஆகும் என்று நீங்கள் எல்லோருக்குமே கூறலாம். மறுபடியும் கிருஷ்ணர் ஆக வேண்டும். இப்பொழுது கிருஷ்ணபுரி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கின்றது. கிருஷ்ணரும் இராஜயோகம் கற்றுக் கொண்டு இருக்கின்றார். நீங்கள் கூட கிருஷ்ணபுரி செல்லவிரும்பினால் இராஜயோகம் கற்றுக் கொள்ளுங்கள். லட்சுமி-நாராயணர் என்று கூறும் பொழுது மனிதர்கள் குழம்பி விடுகின்றார்கள். கிருஷ்ணரை ஊஞ்சலில் ஊஞ்சலாட்டுகிறார்கள். பூஜை லட்சுமி நாராயணருக்குச் செய்கிறார்கள். அவர்களது குழந்தைப் பருவ சரித்திரம் எதுவும் கிடையாது. இராதை கிருஷ்ணர் பின் எங்கு சென்றார்கள். என்ன முடிவு எதுவுமே தெரியாது. இராதை கிருஷ்ணர் தங்களுக்குள் சகோதரன் சகோதரி அல்ல. இப்பொழுது இராதை கிருஷ்ணரின் இராஜ்யமோ இல்லை. துவாபரத்தில் கூட அவர்களது இராஜதானி பற்றி ஏதாவது தெரியுமா என்ன? எனவே இந்த எல்லா விஷயங்களையும் புரிந்து கொள்ள மிகவும் நல்ல புத்தி வேண்டும். புத்தகங்கள் தயாரிப்பதில் கூட முயற்சி தேவைப்படுகிறது. விஷ்ணுவிற்கு அலங்காரம் காண்பிக்கிறார்கள். ஆனால் உண்மையில் விஷ்ணுவிற்கு இந்த அலங்காரங்கள் இருப்ப தில்லை. விஷ்ணு அல்லது லட்சுமி நாராயணருக்கு சங்கு இருக்குமா என்ன? எனவே நாம் என்ன எழுதலாம்? மனிதர்களோ ஒன்றும் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். சங்கோ உங்களிடம் உள்ளது. எனவே அலங்காரம் அவசியம் பிராமணர்களுக்குக் கொடுக்க வேண்டும். கூறுவார்கள், இந்த பிராமணர்கள் எங்கிருந்து வந்தார்கள்? புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். நீங்கள் புரிய வைக்க முடியும். நாமாகிய பிராமணர்கள் சுயதரிசன சக்கரதாரி ஆவோம். இந்த எல்லா விஷயங்களையும் புரிய வைப்பதற்கு மிகவும் விசாலபுத்தி வேண்டும். பிரஜையில் செல்லவிருக்கும் மந்த புத்தி உடையவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். புரிய வைப்பது மிகவும் கடினமானது என்று கூறுவார்கள். தேடி கண்டெடுத்த செல்லமான சுயதரிசன சக்கரதாரி பிரம்மா முக (வாய் வழி ஞானம் கேட்டு பிறவி எடுத்த) வம்சாவளி என்று பாபா எழுதவும் செய்கிறார். ஆனால் உங்களிடம் அலங்காரம் எங்கே உள்ளது? படங்களில் தேவிகளுக்கு மூன்றாவது

கண் கொடுத்துள்ளார்கள். ஆனால் அவர் களுக்கோ மூன்றாவது கண் கிடையாது. உங்களுக்கு இப்பொழுது மூன்றாவது கண் திறந்துள்ளது. சக்திகளாகிய உங்களுக்கு மகிமை உள்ளது. ஜகதம்பா இருக்கிறார் என்றால் குழந்தைகளும் கூட இருப்பார்கள். அதிகமாக தாய்மார்கள் உள்ளார்கள். தாய்மார்களைத்தான் உயர்ந்தவர்களாக ஆக்குகிறார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுத்த குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தனது நேரத்தை சேவையில் பயனுள்ளதாக ஆக்க வேண்டும். உடல்-மனம்-பொருள் அனைத்தையும் அர்ப்பணம் செய்து உயிருள்ளவரையும் படிப்பைப் படித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

(2) தங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஞானத்தால் பாலனை செய்ய (வளர்த்து வர) வேண்டும். தந்தைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும் வகையிலான எந்த காரியமும் செய்யக்கூடாது

வரதானம் : அவிநாசி அதிந்திரிய சுகத்தில் இருந்து, அனைவருக்கும் சுகம் தரக்கூடிய மற்றும் சுகம் பெறக்கூடிய மாஸ்டர் சுகம் தரும் வள்ளல் ஆகுக.

சுலோகன்: அதிந்திரிய சுகம் என்றால் ஆத்மிக சுகம், அழியாதது. இந்திரியங்கள் அதுவே அழியக்கூடியவை என்பதால் அவற்றால் கிடைக்கும் சுகமும் கூட அழியக்கூடியதாகவே இருக்கும். எனவே சதா அதிந்திரிய சுகத்தில் இருப்பீர்களானால் துக்கத்தின் பெயர்-அடையாளம் வர முடியாது. வேறு யாராவது உங்களுக்கு துக்கம் கொடுப் பார்களானால் நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளாதீர்கள். உங்கள் ஸ்லோகன் - சுகம் கொடுங்கள், சுகம் பெறுங்கள். துக்கம் கொடுக்கவும் வேண்டாம், துக்கம் பெறவும் வேண்டாம். யாரேனும் துக்கம் தருவார்களானால் அதில் மாற்றம் செய்து, நீங்கள் சுகம் கொடுங்கள். அவரையும் சுகமானவராக ஆக்குங்கள். அப்போது மாஸ்டர் சுகம் தரும் வள்ளல் என உங்களைச் சொல்வார்கள்.

சுலோகன்: அதிகம் பேசி சக்தியை வீணாக்குவதற்கு பதிலாக உள்முகநோக்கின் ரசனையின் அனுபவி ஆகுங்கள்.